**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**MC No.02/2022 Date:20-06-2024**

**எ.ம.சா.2 – ராஜா, த/பெ.சண்முகம்,**

**(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்).**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) எனது வீட்டிற்கும், எதிர்மனுதாரர் வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 3 கி.மீ துாரம் இருக்கும். எதிர்மனுதாரரின் தந்தை இறந்த பிறகு எங்களது குடும்பத்தினருக்கும், எதிர்மனுதாரரின் குடும்பத்தினருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். நானும், எதிர்மனுதாரரும் உறவினர்கள் இல்லை என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரரின் தந்தையிடம் சமையல்காரராக பணிசெய்தேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் உள்ள பிரச்சனை குறித்து எதிர்மனுதாரரின் தந்தை சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான், ஆனால் அவ்வப்போது நான் அவர்களின் வீட்டிற்கு சென்றபோது இருவரும் சண்டை போட்டுகொண்டிருப்பதை பார்த்துள்ளேன்.

2) எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் உள்ள பிரச்சனை குறித்து நான் சமாதானம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றால் சரிதான், பார்க்க மட்டும் தான் செய்தேன். எனக்கு சமையல் ஆர்டர் வந்தவுடன் எந்த வீட்டில் வேலையோ அந்த வீட்டிற்கு சென்று தான் சமைப்பேன் என்றும், எதிர்மனுதாரரின் வீட்டில் இருக்க மாட்டேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரும், மனுதாரரும் எந்த தேதியில் சண்டை போட்டுகொண்டார்கள் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். எதிர்மனுதாரரும், மனுதாரரும் எந்த விஷயமாக சண்டை போட்டுகொண்டார்கள் என்றும் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான்.

3) எதிர்மனுதாரர் குடும்பத்தினருக்கு மகுடஞ்சாவடி பகுதியில் சொந்தமாக 4-5 வீடுகள் உள்ளன என்றால் சரிதான். எதிர்மனுதாரருடன் பிறந்தவர் ஒரு அண்ணன் மட்டும் தான் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மகுடஞ்சாவடி பகுதியில் உள்ள கோவில்களுக்கு பூசாரியாகவும் உள்ளார் என்றால் சரிதான், விஷேசம் வந்தபோதெல்லாம் பூசாரி வேலை செய்வார். எதிர்மனுதாரர் கோவில் பூசாரியாக உள்ளதால் அதன் மூலமாகவும் வருமானம் வருகிறது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் பெங்களூரில் இருந்த ஒரு வேலையை விட்டு நின்றுவிட்டார் என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

4) எதிர்மனுதாரருக்கு வேலை இல்லை என்பது குறித்து எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நான் பார்க்கும்போதெல்லாம் வீட்டில் இருப்பார். எதிர்மனுதாரர் வேலைக்கு செல்கிறாரா அல்லது இல்லையா என்பதை பார்ப்பது தான் எனது வேலையா என்றால் நான் அந்த வழியாக செல்லும்போது பார்த்ததோடு சரி. எதிர்மனுதாரரின் தந்தை இறந்த பிறகு எதிர்மனுதாரருடன் எனக்கு தொடர்பு இல்லை என்றும், நான் வழக்கிற்காக அவரை வீட்டில் பார்த்து வருகிறேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் உள்ள பிரச்சனை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், எதிர்மனுதாரர் வேலைக்கு சென்று வருவது தெரிந்தும் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**- இல்லை.

Witness (Sd)-Raja

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.